DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2020 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ம் தேதியன்று அரசு சாட்சி ஆக விசாரிக்கப்படுவர். 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர் - திரு. கருப்புசாமி வயது

தந்தை பெயர் தொழில்

கிராமம் தாலூக்கா

மாவட்டம்

<u>முதல் விசாரணை:</u>-

நான் தற்போது தர்மபுரியில் வசித்து வருகிறேன். நான் தர்மபுரியில் உள்ள டாஸ்மாக் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2012 ம் ஆண்டில் அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 12.08.2012 ம் தேதியன்று தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட குரூப்-2 தேர்விற்கு தர்மபுரி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் எழுத்து மூலமான உத்தரவின்படி மேற்படி தேர்விற்காக நடமாடும் கண்காணிப்பு பணிக்குழுவில் நான் நியமிக்கப்பட்டேன். அந்த எழுத்து மூலமான உத்தரவில் எனக்கு பணி ஒதுக்கப்பட்ட பள்ளிகள் கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்

நிலைப்பள்ளி, கம்பையநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆர்.கோபிநாதன்பட்டி ஸ்ரீகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்வுப்பணிக்காக நியமிக்கப்பட்டேன். தர்மபுரி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.எண்.16286/2012/F2, தேதி.08.08.2012 தேதியிட்ட உத்தரவு **அ.சா.ஆ.3** ஆகும். மேற்படி உத்தரவின்படி என்னுடைய கண்காணிப்பு பணியானது தேர்வு நடைபெறும் மேற்படி 3 பள்ளிகளுக்கும் சென்று, தேர்வு குறித்து கண்காணிப்பு செய்து, தேர்வு முடிவுற்றதும் விடைத்தாள்களைப் பெற்று, சார்கருவூலத்திற்கு அனுப்பி வைப்பதும், அது தொடர்பான இதர பணிகளும் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அன்று நடைபெற்ற தேர்வானது காலை 10.00 மணி முதல் 1 மணி வரை நடைபெற பணிக்கப்பட்டிருந்தது. எனக்கு வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தேர்வு நடைபெற்ற தினம் காலை சுமார் 8 மணிக்கே கம்பையநல்லூர் ஆண்கள் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பணி நிமித்தமாக சென்றிருந்தேன். அதனடிப்படையில் காலை 9.30 மணியளவில் தேர்வு நடைபெற்ற மேற்படி பள்ளியின் வகுப்பறைகளை நான் பார்வையிட்டேன். பின்பு காலை 10.00 மணியளவில் மேற்படி பள்ளியின் கேட் அருகே நின்று கொண்டிருந்தேன். அப்போது என்னுடன் வருவாய் வட்டாட்சியர் திரு. குணசேகரன், தேர்தல் வட்டாட்சியர் திரு. கமலநாதன், வருவாய் ஆய்வாளர் திருமதி. உமாராணி ஆகியோரும் கேட் அருகே நின்று கொண்டிருந்தார்கள். அப்போது காலை சுமார் 10.10 மணியளவில் சுரேஷ்குமார், த/பெ. சீனிவாசன், முத்தானூர் என்பவர் அடையாள அட்டையை

என்னிடம் காண்பித்து 59 பக்கங்கள் கொண்ட வெள்ளைப்பேப்பரில் கையால் எழுதப்பட்டு, ஜெராக்ஸ் செய்யப்பட்ட வினா விடைத்தாள்களை அவர் கையில் வைத்திருந்தார். அவர் தேர்வறைக்கு செல்ல முற்படும்போது அவற்றை எடுத்துச் செல்லக்கூடாது என்று நான் தடுத்தபோது, அவர் மேற்படி வினாவிடைத்தாள்கள் அடங்கிய 59 பக்கங்கள் கொண்ட வெள்ளைத்தாளினால் ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட அந்த பேப்பர்களை என்னிடமே தந்து விட்டு அறை எண்.32 க்கு தேர்வெழுத சென்று விட்டார். பின்பு அவர் என்னிடம் கொடுத்து சென்ற வினா விடைத்தாள்களை சந்தேகப்பட்டு அதை அருகிலிருந்த வருவாய் அலுவலர்கள் மூவரிடமும் காண்பித்து, பின்பு வருவாய் ஆய்வாளர் உமாராணியிடம் தேர்வறைக்கு சென்று தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் வழங்கப்பட்ட வினாத்தாளுடன் ஒப்பிட்டு பார்த்து வரும்படி கேட்டுக் கொண்டேன். அதனடிப்படையில் வருவாய் ஆய்வாளர் உமாராணி அவர்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் வழங்கப்பட்ட வினாத்தாளுடன், சுரேஷ்குமார் என்னிடம் ஒப்படைத்து விட்டுச் சென்ற 59 பக்கங்கள் கொண்ட ஜெராக்ஸ் வினாவிடைத்தாள்களுடன் ஒப்பிட்டு பார்த்ததில், இரண்டிலும் பல வினா விடைகள் ஒத்துப் போவது தெரிய வந்தது என்று வருவாய் ஆய்வாளர் உமாராணி என்னிடம் வந்து சொன்னார். அதற்குப் பிறகு நானும் மேற்கண்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் வழங்கப்பட்ட வினாத்தாளுடன், சுரேஷ்குமார் என்னிடம் ஒப்படைத்து விட்டுச் சென்ற 59 பக்கங்கள் கொண்ட ஜெராக்ஸ் வினாவிடைத்தாள்களுடன் ஒப்பிட்டு பார்த்ததில், இரண்டிலும் பல வினா விடைகள் ஒத்துப் போவது தெரிய வந்தது.

அதற்குப் பிறகு தேர்வு முடிந்த பிறகு சுரேஷ்குமார் என்பவர் வெளியே வந்ததும் பள்ளி வளாகத்திற்குள்ளேயே மேற்படி சுரேஷ்குமாரை நான் விசாரணை செய்த போது, தானிப்பாடியைச் சேர்ந்த விவேகானந்தன் என்பவர் மூலமாக முத்தானூரைச் சேர்ந்த அருண், பூபேஸ் ஆகியோருடன் 11.08.2012 ம் தேதி திருவண்ணமாலைக்கு டாடா இண்டிகா காரில் சென்று, மண்ணூர்பேட்டையைச் சேர்ந்த ரங்கராஜன் என்பவர் அறிமுகப்படுத்திய, குமார் என்கிற கார்த்திக் என்பவரிடம் ரூ.3,00,000/- கொடுத்து 59 பக்கங்கள் அடங்கிய கையால் எழுதப்பட்டு ஜெராக்ஸ் செய்யப்பட்ட வினா விடைத்தாள்களை பெற்றதாகவும், மீதமுள்ள தொகை ரூ.50,000/- தன்னிடம் இருப்பதாகவும், 59 பக்கங்கள் அடங்கிய கையால் எழுதப்பட்ட வினாவிடைத்தாள்களில் உள்ள கேள்விகள் தான் 12 ம் தேதி நடைபெறும் தேர்வில் வரும் என்று சொல்லி, குமார் என்ற கார்த்திக் தன்னிடம் கொடுத்ததாக சுரேஷ்குமார் என்னிடம் தெரிவித்தார். தேர்வில் எப்படியாவது குறுக்கு வழியில் தேர்ச்சி பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி வினா விடைத்தாள்களை வாங்கி வந்ததாக சுரேஷ்குமார் என்னிடம் தெரிவித்தார். அவருக்கு உதவி செய்தவர்களுடைய விவரம் தன்னுடைய கைபேசியில் உள்ளதாகவும் சுரேஷ்குமார் என்னிடம் தெரிவித்தார். அதன் பின்பு பாதுகாப்பு பணியில் நின்று கொண்டிருந்த தலைமைக் காவலர்களான 1824, 1493 ஆகிய எண்கள் கொண்ட குணசேகரன் மற்றும் சாதிக் ஆகியோருடன் சுரேஷ்குமாரை கம்பையநல்லூர் காவல் நிலையத்திற்கு மதியம் சுமார் 2.30 மணிக்கு அழைத்துச் சென்று, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் வழங்கப்பட்ட

வினாத்தாள் எண்.05402324 மற்றும் சுரேஷ்குமார் வைத்திருந்த நோக்கியா செல்போன், 59 பக்கங்கள் கொண்ட கையால் எழுதப்பட்டு ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட வினா விடைத்தாள்கள், 500 ரூபாய்கள் அடங்கிய 100 எண்ணிக்கையிலான பணம் ரூ.50,000/- ஆகியவற்றை கம்பையநல்லூர் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். கம்பையநல்லூர் காவல் ஆய்வாளர் பொறுப்பில் இருப்பதாகவும், அவர் பாப்பிரெட்டிபட்டி காவல் நிலைய ஆய்வாளர் என்றும் என்னிடத்தில் தெரிவித்தார். நான் ஆஜர் செய்த சுரேஷ்குமாரை, காவல் ஆய்வாளர் என்னுடைய முன்னிலையில் விசாரணை செய்தார். சுரேஷ்குமார் கொடுத்த வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், வருவாய் ஆய்வாளரும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சுரேஷ்குமார், நான் விசாரித்தபோது கூறிய குறுக்கு வழியில் வினாவிடைத்தாள்களைப் பெற்ற சங்கதிகளையே ஆய்வாளரிடமும் கூறினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் சுரேஷ்குமார், தனக்கு உதவி செய்த விவேகானந்தன், ரங்கராஜ் ஆகியோர் அரூர் பேருந்து நிலையத்தில் காத்திருப்பதாக சொன்னார். என்னை அழைத்துச் சென்றால் மேற்படி நபர்களை அடையாளம் காட்டுவதாகவும், சுரேஷ்குமார் காவல் ஆய்வாளரிடம் சொன்னார். அதனடிப்படையில் சுரேஷ்குமார் அழைத்துச் சென்றதன் பேரில் நானும், வருவாய் ஆய்வாளர், காவல் ஆய்வாளர் ஆகியோர் அரூர் பேருந்து நிலையத்திற்கு சென்றோம். நான் காவல் நிலையத்தில் பொருட்களை ஒப்படைத்தபோதே இந்த சங்கதிகள் பொறுத்து காவல் நிலையத்தில் புகார்

கொடுத்தேன். அந்த புகார் தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான். அது **அ.சா.ஆ.4** ஆகும். அந்த புகாரைப் பொறுத்து விசாரணை செய்து, வழக்குப் பதிவு செய்தார்கள். நான் ஒப்படைத்த பொருட்களையும் இதே வழக்கில் காவல் ஆய்வாளர் மகசரில் என் முன்னிலையிலும், வருவாய் ஆய்வாளர் உமாராணி முன்னிலையிலும் காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றினார். அதேபோல் சுரேஷ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் காவல் ஆய்வாளர் என் முன்னிலையில் பதிவு செய்து, அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றார். மகசரில் முதலிலும், ஒப்புதல் வாக்குமூலத்தில் அதன்பிறகும் கையொப்பம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், மகசரிலும் முதலாவதாக நான் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.5** ஆகும் (சுரேஷ்குமார் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்திய சாட்சியியல் சட்டம் பிரிவு.27 க்கான கைப்பற்றுதல் எதுவும் இல்லாததால், மேற்படி வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2 ன் கையொப்பத்தை குறியீடு செய்வதில் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் சொல்லப்பட்ட ஆட்சேபனையுடன் மேற்கண்ட கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டது). மகசர் **அ.சா.ஆ.6** ஆகும். பின்னிட்டு எதிரி சுரேஷ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், சுரேஷ்குமார் அழைத்துச் சென்றதன் பேரில் அரூர் பேருந்து நிலையத்திற்கு நாங்கள் சென்றபோது, எதிரி சுரேஷ்குமார், காவல் ஆய்வாளரிடம் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த விவேகானந்தன், ரங்கராஜ் ஆகியோரை

அடையாளம் காட்டினார். சுரேஷ்குமாரால் அடையாளம் காட்டப்பட்ட தானிப்பாடியைச் சேர்ந்த விவேகானந்தன், திருவண்ணமாலையைச் சேர்ந்த ரங்கராஜ் ஆகியோரை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார். மேற்படி நபர்கள் இருவரையும் காவல் ஆய்வாளர் கைது செய்து, காவல் படுத்தி, விவேகானந்தன் மற்றும் ரங்கராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்து, என்னிடமும், வருவாய் ஆய்வாளர் உமாராணியிடமும் சாட்சிக் கையொப்பம் பெற்றார். விவேகானந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில், தன்னிடம் 59 பக்கங்கள் கொண்ட வினாவிடைத்தாள்கள் இருப்பதாக தெரிவித்து,எங்களை தானிப்பாடியில், செல்வவிநாயகர் கோவில் வீதியில் உள்ள அவரது மெத்தை வீட்டிற்கு அழைத்துச் சென்று, 59 பக்கங்கள் கொண்ட வினாவிடைத்தாள்கள் 2 எண்ணிக்கையை காவல் ஆய்வாளரிடம் ஆஜர்படுத்தினார். காவல் நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் எங்களிடமிருந்து கைப்பற்றிய, சுரேஷ்குமாரிடமிருந்து நாங்கள் பெற்றிருந்த 59 பக்கங்கள் கொண்ட கையால் எழுதப்பட்டு ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட வினாவிடைத்தாள்கள் **சா.பொ.4** ஆகும். தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வாளர் சுரேஷ்குமாருக்கு வழங்கப்பட்ட வினாத்தாள் **சா.பொ.5** ஆகும். சுரேஷ்குமாரிடமிருந்து கைப்பற்றப்பட்டு காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நோக்கியா செல்போன் ஒன்று சிம்முடன் கூடியது **சா.பொ.6** ஆகும். சுரேஷ்குமாரிடமிருந்து கைப்பற்றப்பட்டு காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட 100 எண்ணிக்கையிலான 500 ரூபாய்தாள்கள் அடங்கிய

பணம் ரூ.50,000/-ம் **சா.பொ.7** ஆகும். விவேகானந்தன் ஆஜர் செய்த 59 பேப்பர்கள் கொண்ட 200 கேள்விக்கான **CSSE**1 **Group** 7(**Executive Officer Grade III**) 2 செட்டுகளை மகசரில் கைப்பற்றினார். அந்த மகசர் **அ.சா.ஆ.7** ஆகும். விவேகானந்தன் ஆஜர் செய்த 59 பேப்பர்கள் கொண்ட 200 கேள்விக்கான **CSSE**1 **Group** 7(**Executive Officer Grade III**) 2 செட்டுகள் **சா.பொ.8** ஆகும். விவேகானந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.8** ஆகும். பின்பு ரங்கராஜ் என்பவர் காவல் ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் என் முன்னிலையிலும், வருவாய் ஆய்வாளர் உமாராணி முன்னிலையிலும் அரூர் பேருந்து நிலையத்தில் வைத்து பதிவு செய்தார். ரங்கராஜ் காவல் ஆய்வாளரிடம் கொடுத்த தனது ஒப்புதல் வாக்குமூலத்தில், தன்னிடம் 59 பக்கங்கள் கொண்ட வினாவிடைத்தாள்கள் 2 செட் இருப்பதாக சொல்லி, அவர் சொன்னதன் பேரில் திருவரங்கம் சென்று ரங்கராஜ் அவரது மெத்தை வீட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த 59 பக்கங்கள் கொண்ட 200 கேள்விக்கான வினாவிடைகள் அடங்கிய **CSSE**1 **Group** 7(**Executive Officer Grade III**) 2 செட் வினாத்தாள்களை எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். அந்த மகசர் **அ.சா.ஆ.9** ஆகும். ரங்கராஜ் வீட்டிலிருந்து காவல் ஆய்வாளர் கைப்பற்றிய 59 பக்கங்கள் கொண்ட 200 கேள்விக்கான வினாவிடைகள் அடங்கிய **CSSE**1 **Group** 7(**Executive Officer Grade III**) 2 செட் வினாத்தாள்கள் **சா.பொ.9** ஆகும். எதிரி ரங்கராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட

பகுதி **அ.சா.ஆ.10** ஆகும். பின்னிட்டு சுரேஷ்குமார், விவேகானந்தன் மற்றும் ரங்கராஜ் ஆகியோருடன் அனைவரும் காவல் நிலையம் வந்தோம். எதிரிகள் சுரேஷ்குமார், விவேகானந்தன் மற்றும் ரங்கராஜ் ஆகியோரைப் பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலும். எதிரிகள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் கு.வி. செய்யப்படவில்லை.